பக்கங்கள்:-20

# காலை முரசு


முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 10 | புதன்கிழமை | 24.01.2024 | அதிர்வு 176

## சு.க. தலைமையில் புதிய கூட்டமைப்பு

### மைத்திரி முக்கிய கலந்துரையாடல்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுக் கூட்டமைப்பு ஒன்றை எதிர்காலத்தில் 06



# வரலாறு காணாத மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நாம் தயார்!

## இந்தியத் தூதுவரிடம் அநுரகுமார தெரிவிப்பு

(சுடர் திலீபன்)

"இலங்கை மக்கள் தற்போது ஆட்சியில் உள்ள அரசை அடியோடு வெறுக்கின்றார்கள். அரசியலில் அவர்கள் வரலாறு காணாத மாற்றத்தை விரும்புகின்றார்கள். எனவே, மக்கள் விரும்பும் மாற்றத்தை ஏற்படுத்த தேசிய மக்கள் சக்தியினராகிய நாங்கள் தயாராக இருக்கின்றோம்."

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி., இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் நேரில் தெரிவித்தார். 06

## இரு பஸ்களின் ஊழியர்கள் கைகலப்பு! நால்வர் வைத்தியசாலையில் சேர்ப்பு!!

### வவுனியாவில் நேற்று பரபரப்பு



(கி.வசந்தரூபன்)

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதி, நடத்துனருக்கும், தனியார் பஸ் சாரதி, நடத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக நால்வர் காயங்களுடன் 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் வெற்றி பெற்றுள்ள யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இன்னும் கட்சியின் தலைவராகவில்லை. அவர் கட்சியின் President Elect மட்டுமே. வருகின்ற ஞாயிற்றுக்கிழமை கட்சியின் தேசிய மாநாட்டில்தான் அவர் முறைப்படி கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்க இருக்கின்றார். அது வரையில் மாவை 05




# மூன்றாம் தரப்பின் தலையீடு பேச்சுகளின்போது வேண்டும்

## தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீதரனிடம் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் வலியுறுத்து

(கி.வசந்தரூபன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன், அரசுடனான எந்தவொரு பேச்சுகளிலும் மூன்றாம் தரப்பினரின் தலையீட்டைக் கோர வேண்டும் என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

வவுனியாவில் தொடர் போராட்டத்தை மேற்கொண்டு வரும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் போராட்டம் ஆரம்பித்து நேற்று 7 ஆவது ஆண்டு நிறைவை அனுஷ்டித்திருந்தனர்.

இந்நிலையில், வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டபோதே சங்கத்தின்




செயலாளர் கோ. ராஜ்குமார் மற்றும் சங்கத் தலைவி கா.ஜெயவனிதா ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்கள்,

“காணாமல் ஆக்கப்பட்ட நமது அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிப்பதில் நமது முயற்சிகளை வலுப்படுத்துவதே எங்கள் அர்ப்பணிப்பாகும். மேலும் நமது தைரியத்தின் ஆதாரம் நமது இறையாண்மையில் உள்ளது.

இந்தச் சாவடியில் எங்களின் ஏழாவது ஆண்டு கடினமான பணி நிறைவு பெற்று 8 ஆவது ஆண்டைத் தொடர்கின்றது. நமது இறுதி இலக்கான இறையாண்மையை அடைவதற்கு இடைவிடாமல் பாடுபடும்போது நமது உறுதி அசையாது. காணாமல் ஆக்கப்பட்ட எமது தமிழ்ப் பிள்ளைகளின் இருப்பிடம் தொடர்பில் விசாரணை செய்வதற்குத் தேவையான அதிகாரத்தை இதன் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

நாங்கள் எங்கள் பிரசாரத்தைப் பல நாடுகளுக்கு விரிவுபடுத்துகின்றோம். மேலும் போராடும் தமிழர்களின் சார்பாக வாதிடுவதற்கு ஐரோப்பா மற்றும் பிற பிராந்தியங்களுக்குச் செல்ல விரும்பும் நபர்களை நாடி வருகின்றோம்.

எங்கள் வெளிநாட்டுக் குழுவின் பிரசாரத்துக்கு ஆதரவளிப்பதில் பல பொறுப்பை ஏற்க அனைத்து நாடுகளிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களை நாங்கள் ஊக்குவிக்கின்றோம். இந்த ஆதரவு, வாக்கெடுப்பு தொடர்பான நமது பார்வையைத் திறம்பட வாதிட எங்களுக்கு அதிகாரம் அளிக்கும்.

தமிழர் விடுதலையை நசுக்குவதை ஆதரிக்கக் கூடாது என்று வலியுறுத்தி சுவிட்சர்லாந்து அதிபருக்குக் கடிதம் எழுதினோம். அதற்குப் பதிலாக, ஜனநாயகக் கருவியான சர்வஜன வாக்கெடுப்பைப் பயன்படுத்துவதற்கு அவர்களின் ஆதரவைக் கேட்டோம்.

இதே நடவடிக்கையை ஜப்பான் பிரதமரிடமும் கோரத் திட்டமிட்டுள்ளோம். இந்த வாரத்தில் அவருக்கு ஒரு கடிதம் அனுப்பப்படும். எங்கள் வாக்கெடுப்புக்கு ஆதரவைப் பெற அமெரிக்க வெள்ளை மாளிகையுடன் தொடர்புகொள்வோம்.

(3ஆம் பக்கம் பார்க்க....)








# மூன்றாம் தரப்பின் தலையீடு பேச்சுகளின்போது வேண்டும்



## தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீதரனிடம் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் வலியுறுத்து

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் “இம யமலைப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டமைக்கும் எமது வருத்தத்தைத் தெரிவிக்க விரும்புகின்றோம். இந்த அறி விப்பு பைடனின் நிகழ்கால மற்றும் கடந்த கால வெளியுற வுக் கொள்கைக்கு முரணானது.

ஒவ்வொரு அமெரிக்கத் தூதுவரும் மற்றும் புதிய அமெ ரிக்க அரசுத் துறை அதிகாரிகளும் “அமைதி மற்றும் ஸ்திரத் தன்மை” என்ற கொள்கையின் அடிப்படையில் தங்கள் சிந் தனையை முயற்சி செய்கின்றார்கள். ஆனால், அது செயற் படவில்லை. அது வேலை செய்யாது என்பதை அவர்கள் உண ரும்போது, அவர்கள் தங்கள் பதவி நிலையை விட்டு வெளி யேறி வருகின்றனர்.

ஒரு நேர்காணலின்போது, தூதுவர் பிளேக், ராஜபக்ஷ



அரசின் நடவடிக்கைகள் குறித்து இரண்டு மாறுபட்ட அறிக் கைகளை வழங்கினார். ஆரம்பத்தில், பிரிவினைவாதப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசுக்குக் கால அவகாசம் தேவை என்று அவர் நம்பிக்கை தெரிவித் தார். எவ்வாறாயினும், நீதி, மனித உரிமைகள் மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் ராஜபக்ச அரசு தன்னிடம் நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டது என் பதை உணர்ந்து கொண்டதாக அவர் பின்னர் ஒப்புக் கொண்டார்.

போஸ்னியா, கொசோவோ, ஈராக், மத்திய கிழக்கு மற்றும் உக்ரைன் மீதான ஜனாதிபதி பைடனின் கடந்த கால மற்றும் தற்போதைய கொள்கைகளை தூதுவர் ஜூலி சுங்குக்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம். இந்தக் கொள்கைகள், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கண்காணிக்கப்படும் சர்வ தேச எல்லைகள் மூலம், அவர்களின் இருப்பு பாதுகாப்பு மற்றும் அமைதியை அளித்துள்ளன.

தமிழரசுக் கட்சி சுமந்திரனைத் தலைமைப் பதவியி லிருந்து நீக்கியிருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின் றோம். எனினும், அவரைத் தமிழ் அரசியலில் இருந்து அகற் றுவதும் இன்றியமையாதது. அவர் தமிழினத்துக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கின்றார். அத்துடன் நமது சுதந்திரத் துக்கும் தடையாகச் செயற்படுகின்றார்.

சிறிதரன் பெற்ற வாக்குகள் சுமந்திரனுக்கு எதிரானவர்க ளிடமிருந்தே வந்துள்ளன. ஆனால், அவை அவருடைய அடிப்படை ஆதரவைப் பிரதிபலிக்கவில்லை என்பதை புதிய தலைவர் அறிந்திருக்க வேண்டும். சிறிதரன் சர்வஜன வாக் கெடுப்புக்கு வாதிட வேண்டும். இலங்கையுடனான எந்த வொரு பேச்சுகளிலும் மூன்றாம் தரப்பினரின் தலையீட்டைக் கோர வேண்டும்.

நமது தொடர் போராட்டத்தின் 7வது ஆண்டு நினை வேந்தலில், வரும் ஆண்டுக்கான நம்பிக்கையை நிலை நிறுத்துவோம். இந்தப் பயணத்தில் புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் பங்களித்து எம்முடன் இணைந்துகொள்ள வேண்டும்.” – என்றனர்





# இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலத்தினால் டிஜிட்டல் பொருளாதாரத்துக்குப் பெரும் பாதிப்பு

## எரான் விக்கிரமரத்ன எம்.பி. சபையில் கருத்து

"இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூல விவகாரத்தில் அரசாங்கம் அவசரப்படுவது பிரச்சினைக்குரியது. சேதனைப் பசளை நடைமுறைப்படுத்தலிலும் இவ்வாறான நிலை காணப்பட்டது. இறுதியில் பெறுபேறு பாரதூரமாக இருந்தது. இந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உத்தேச இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"சேதன பசளைத் திட்டத்தை கடந்த அரசாங்கம் அவசரமாக செயற்படுத்தியது, இறுதியில் முழு நாடும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது.

உத்தேச இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலமும் அந்த வகையில் தான் முறையான வழிமுறைகள் ஏதும் இல்லாமல் அவசர அவசரமாக முன்வைக்கப்பட்டுள்ளது. உத்தேச இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் 57 சரத்துக்களில் 34 சரத்துகள் அரசமைப்புக்கு முரண் என உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் அரசமைப்புக்கு முரணா, முரணற்றதா என்பதை மாத்திரமே நீதிமன்றம் ஆராயும், கொள்கை ரீதியில் நோக்காது. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பிரசாரங்களை தடுப்பதற்காகவே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளாதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிடுகிறார்.

இதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இந்த சட்டமூலத்தின் உண்மை நோக்கம் அதுவல்ல, தற்போதைய டிஜிட்டல் யுகத்துக்கு எதிரான அம்சங்களை உள்ளடக்கிய வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்துக்கு அப்பாற்பட்ட வகையில் நாட்டு மக்களின் உரிமைகளை பாதுகாக்க மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம். இந்த சட்டமூலம் தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். சிறந்த விடயங்களுக்கு எதிர்க்கட்சியினர் நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் பெரும்பாலான



சரத்துக்கள் நாட்டு மக்களை அச்சமூட்டும் வகையில் காணப்படுகிறது.

பிறிதொரு பெயரில் முகப்பு புத்தக கணக்குகளை பாவிப்பது ஐந்து வருட கால சிறைத்தண்டனைக்குரிய குற்றம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தனது சொந்த அடையாளத்தை வெளிப்படுத்தாமல் முரண்பாடற்ற வகையில் கருத்து தெரிவிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு, இந்த உரிமை இந்த சட்டத்தில் மீறப்பட்டுள்ளது.

இலங்கையில் சேவையில் உள்ள சமூக ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு இந்த சட்டமூலத்தின் ஊடாக பாரிய நெருக்கடிகள் ஏற்படும்.

இதனால், டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படும். பெரும்பான்மை பலம் தம்மிடம் உள்ளதால் அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்படுகிறது. ஆகவே இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டாலும் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படும்." – என்றார்.






# ஜனாதிபதியின் சரியான வேலைத் திட்டத்தினால் பொருளாதாரம் குறித்து நம்பிக்கை ஏற்பட்டுள்ளது

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட சரியான பொருளாதார வேலைத்திட்டத்தினால் சர்வதேச சமூகத்தில் இலங்கையின் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடிந்துள்ளது.

– இவ்வாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற “2024 வரவு செலவுத்திட்டம்“ கருத்தரங்கின்போது சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றபோது நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது. எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள் மற்றும் மணிக் கணக்கில் மின்வெட்டு ஏற்பட்டது. அப்போது அமுல்படுத்தப்பட்ட வரிக் கொள்கையால், அரச வருமானம் சரிவு, தவறான விவசாயக் கொள்கை, வரிக் கோப்புகள் குறைப்பு போன்ற காரணிகளால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

கொவிட் நோய்த்தொற்று காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததால், அந்நியச் செலாவணியும் வீழ்ச்சியடைந்தது. தொடர்ந்து நடந்த போராட்டத்தால், பொருளாதாரச் சரிவு உச்சத்தை எட்டியது. இதன் காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்தது. மக்கள் தொழில்களை இழந்தனர். இவ்வாறானதொரு நெருக்கடி நிலையிலேயே தற்போதைய ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்றார்.

அவர் விவசாயக் கொள்கையை மாற்றி அரிசி உற்பத்தியைப் பெருக்கினார். இதனால் உணவுத் தட்டுப்பாடு குறைந்தது. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் புதிய வேலைத் திட்டத்திற்கு இணக்கம் காணப்பட்டது. அதன்படி, நிதி சீர்திருத்தங்கள், சட்ட மறுசீரமைப்புகள் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக ஸ்திரப்படுத்தும் வேலைத்திட்டத்தில் அரசாங்கம் இறங்கியது. புதிய வரி விதிப்பினால் மக்கள் மீது சில அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், இந்த நடவடிக்கையில் இலங்கையின் பொருளாதாரம் வலுவடைந்து வருகிறது. இலங்கை மீது சர்வதேச நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

மேலும், சுற்றுலாத் துறையைக் கட்டியெழுப்ப புதிய சீர்திருத்த முன்மொழிவுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தப் பொருளாதார வேலைத் திட்டத்தின் மூலம் பணம் செலுத்தும் இருப்பில் கையிருப்பை உருவாக்கும் ஆற்றல் கிடைத்துள்ளது. 2022 இல் 2.1 பில்லியன் டொலர்களாக காணப்பட்ட வெளிநாட்டுக் கையிருப்பு இன்று 4.5 பில்லியன் டொலர்கள் வரை அதிகரித்துள்ளது.” – என்றார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
சேனாதிராஜாதான் கட்சியின் தலைவர். சிறீதரன் அல்லர்.

கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலையில் அழைப்பு எடுத்தார். அவர் சில கேள்விகளை எழுப்பினார்.

"விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறப்பதற்கு முன்னரே இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தந்தை செல்வா ஸ்தாபித்து விட்டார். தமிழ்த் தேசியம் என்ற கருத்தியலையும் அப்போதே கட்சியுடன் பின்னிப் பிணைத்து கட்சியை வளர்த்தவர்கள் தந்தை செல்வாவும் பிற தலைவர்களும். ஏதோ தலைவர் பிரபாகரனுடன்தான் தமிழ்த் தேசியம் என்ற கருத்துருவாக்கமே ஏற்பட்ட மாதிரியும், அதன் பின்னர்தான் அந்தக் கருத்தியல் தமிழரசில் வந்து ஒட்டிக் கொண்டமை போலவும் சிலர் பேசுகின்றனர். இது படு அபத்தம்.

"தமிழரசு கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்பவர் முதல் ஆசிக்கும் வணக்கத்துக்கும் போகுமிடம் தந்தை செல்வாவின் நினைவுத்தூபியாகத் தான் இருக்க வேண்டும். அதற்கு சிறீதரன் இன்னும் செல்லவே இல்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, திருகோணமலை, மட்டக்களப்பிலும் கூட தந்தை செல்வா திருவுருவச் சிலைகள் நினைவிடங்களாக உள்ளன. அங்கு எங்கும் சென்று தந்தையை சிறீதரன் துதித்தார் என்ற கதையே இல்லை. மாறாக, மாவீரர் துயிலும் இல்லத்துக்குப் போய் நினைவுத்தூபி முன் நின்று அரசியல் பயணத்தை அவர் ஆரம்பித்தார் என்று நீங்களும் செய்தி வெளியிட்டு இருக்கின்றீர்கள். முதலில் தந்தை நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்திப் பெரியவரின் ஆசீர்வாதத்தை பெறுமாறு அவருக்கு (சிறீதரனுக்கு) ஆலோசனை கூறுங்கள். மூத்த தலைவர்களான மாவை சேனாதிராஜா, சி.வி.கே.சிவஞானம், குலநாயகம், கனகசபாபதி போன்றோருக்குத் தன்னும், இது தொடர்பில் சிறீதரனுக்கு வழிகாட்ட முடியாமல் போனமை துரதிஷ்டமே. தலைவர் பிரபாகரனை நீங்கள் மதியுங்கள். போற்றுங்கள். அதை நான் விமர்சிக்க வரவில்லை. அது உங்கள் விருப்பம். ஆனால் நீங்கள் தந்தை செல்வா ஸ்தாபித்த கட்சியின் தலைமைத்துவத்தைத் தான் ஏற்றிருக்கின்றீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்" - என்று ஏதோ நான்தான் சிறீதரன் என்ற மாதிரி என் மீது பாய்ந்தார் அவர்.

தமிழரசின் இன்னொரு சிரேஷ்ட தலைவரும் ஒரு செய்தி அனுப்பி இருந்தார்.

"மற்றைய தமிழ்க் கட்சிகளை ஒட்டுக் குழுக்கள் என்று அதிகம் திட்டியவர் சிறீதரன்தான். இப்போது ஒட்டுக் குழுக்கள் என்ற பெயரே அவருக்கு மறந்து விட்டது. இப்போது தாம் தலைவரானதும் அந்த ஒட்டுக் குழுக்கள் எல்லாம் பாவ விமோசனம் பெற்று விட்டன போலும். இன்னும் அவர் தலைமைப் பதவியை ஏற்கவில்லை. அதற்குள் ஏன் இந்த அவசர அறிக்கை? கட்சியின் மத்திய குழுவைக் கேட்க வேண்டாமா? அரசியல் குழுவுடன் ஆலோசிக்க வேண்டாமா? கடந்த காலத்தில் கட்சியின் முக்கியஸ்தராகிய உங்களைக் கேட்காமலேயே கட்சி முடிவெடுத்தது என்று அடிக்கடி குறைப்பட்டு, புலம்பிக் கொண்டு இருந்தவர் நீங்கள்தான். இப்போது வந்ததும் வராத விதமாக - பதவி ஏற்க முன்னரே - உங்கள் பாட்டில் தனிப்பட முடிவுகளை எடுத்து அறிக்கைகளை வெளியிடுகின்றீர்களே..?"

"2009 ஆம் வருடத்துக்குப் பின்னால் போக வேண்டும் என்றால் தீர்வு தமிழீழமா? இன்னொரு முள்ளிவாய்க்காலா? மாவீரர்களின் கனவுகளை நனவாக்குவோம் என்றால் தமிழீழம்தான் உங்கள் முடிவா? எண்ணித் துணிக கருமம்" - என்றார் அவர்.

இருவரின் கருத்திலும் விடயங்கள் இருப்பதாகவே நினைக்கிறேன். கட்சியின் தேசிய மாநாட்டில் கட்சியின் தலைமைப் பொறுப்பை புதிய தலைவர் ஏற்று தலைமை உரை நிகழ்த்துவதுதான் முக்கிய விடயம். அப்போது புதிய கருத்தியலை - விளக்கங்களை - தலைவர் வெளியிடுவதும் வழமை.

அதற்கு முன்னர் அவசரப்படுகின்றார் சிறீதரன் என்றே தோன்றுகின்றது.

தன்னுடைய அறிவிப்பின் வார்த்தைகளின் உள்ளார்ந்த அர்த்தங்கள் எத்தனை ஆழமானவை என்பவற்றை புரிந்து கொண்டுதான் அவற்றை கருத்துரைக்கின்றாரா அவர் என்றும் வினா எழுகிறது. 'மாவீரர்களின் கனவை நனவாக்குவோம்' என்ற சொல்லாடல் தனித்து வருகையில் ஆழம் - கனதி - மிக்கது. அது அவருக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.

## சு.க. தலைமையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
உருவாக்குவது தொடர்பில் முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில், கொழும்பு - டாலி வீதியிலுள்ள சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி தற்போது நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரிய தர்சன யாப்பா, நிமல் லான்சா மற்றும் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, நளின் பெர்னாண்டோ மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர் என்றும் கூறப்படுகின்றது.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாரதி துஷ்மந்த மித்ரபால, அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


இந்தக் கூட்டணி தொடர்பில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சமசமாஜ கட்சி என்பவற்றுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

## வரலாறு காணாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
கொழும்பில் உள்ள இந்தியன் இல்லத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே அநுரகுமார எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் நடப்பு அரசியல் நிலவரங்கள் குறித்தும், பொருளாதார நெருக்கடி தொடர்பாகவும், தேசிய மக்கள் சக்தியின் எதிர்கால அரசியல் வேலைத்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் எம்.பியும் மேற்படி சந்திப்பில் கலந்துகொண்டார்.



## இந்தியத் தூதரை சந்தித்த மைத்திரி



இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேற்று சந்திப்பு நடைபெற்றது.

கொழும்பில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கையின் நடப்பு அரசியல் நிலவரங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

## இரு பஸ்களின் ஊழியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பஸ் தரித்து நின்றது. இதன்போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் வருகை தந்து புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாகத் தரித்து நின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இரு பஸ்களின் ஊழியர்களுக்கும் இடையே நேரசூசி தொடர்பில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன், இ.போ.ச. பஸ்ஸின் லைட்டும் உடைக்கப்பட்டது. இதையடுத்து அவர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் இ.போ.ச. பஸ், தனியார் பஸ் ஆகியவற்றின் சாரதிகள், நடத்துனர்கள் என நால்வரும் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸார் இரு பஸ்களையும் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். அத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களிடம் விசாரணைகளையும் அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

# விவசாயம், சுற்றுலாத் துறைக்காக காணிகள் மீண்டும் விடுவிக்கப்படும்

## கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ள காணிகளை விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறைக்காக விடுவிப்பதற்கான பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக 61 குளங்களின் புனரமைப்புப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

“இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப பல வருடங்கள் செல்லுமென்று நாங்கள் உண்மையில் நினைத்திருந்தோம். ஆனால், எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் திறமையான முறையில் கையாண்டு, எமது நாட்டு மக்களுக்கு விடிவு காலம் வரும் வகையில் அதனை செயற்படுத்தி இருக்கின்றார். அதற்காக முதலில் அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

மேலும், வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணம் உட்பட கிராமிய பொருளாதார அமைச்சுக்கு பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய வகையில் இம்முறை நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் நேரடியாக கிராமிய பொருளாதார அமைச்சின் ஊடாக, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஆடுகளை வழங்குதல் மற்றும் சிறு தானிய பயிர்ச்செய்கைக்கு அவசியமான விதைகளை வழங்கும் வேலைத்திட்டங்களும் இவற்றில் அடங்கும்.

இவ்வாறு பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியன் மூலம் எமது அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதியில் சுமார் 95 வீதம் முதல் 98 வீதம் வரையில் செலவிடப்பட்டுள்ளது. அதன் ஊடாக மக்கள் பயனடைந்துள்ளனர்.

குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் இம்முறை பயறு அறுவடை பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. அந்தவகையில் மன்னார் மாவட்டத்தில் மாத்திரம் 1050 மெட்றிக் டொன் பயறு அறுவடை செய்யப்பட்டது. அத்துடன், ஆடு வளர்ப்பிலும் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக மேலும் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை நேரில் சென்று பார்வையிட்டு அது தொடர்பான விடயங்களை மக்களுடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளோம். குறித்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் கடந்த காலங்களில் எமக்கு வழங்கப்பட்ட நிதிகளை முழுமையாகவும் செயற்திறன்மிக்க வகையிலும் பயன்படுத்தியதன் காரணமாக இம்முறை எமக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியை மக்களுக்கு பயன்மிக்க வகையிலும் விரைவாகவும் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

மேலும் வெளிநாட்டு உதவிகளுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக விவசாய முன்னேற்றத்திற்காக குளங்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் மன்னார் மாவட்டத்தில் 30 குளங்களும், வவுனியா மாவட்டத்தில் 31 குளங்களும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இவ்வேலைத்திட்டங்கள் நிறைவடைந்ததன் பின்னர் அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரம் மட்டுமன்றி குறித்த மாவட்டம் உட்பட முழு நாட்டினதும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய இது உதவும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மிகக் குறுகிய காலத்தில் மீளக்கட்டியெழுப்பியதன் காரணமாகவே இவ்வாறு கிராமிய பொருளாதார அமைச்சு மட்டுமின்றி அனைத்து அமைச்சுகளுக்கும் நிதிகள் வழங்கக் கூடியதாக உள்ளது. மேலும் மாவட்ட ரீதியிலும் நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் விவசாய அமைச்சின் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, உணவுத் தட்டுப்பாடு, போசாக்கின்மை போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதே தற்போது அரசின் முன்னுரிமைப் பணியாக உள்ளது. அத்துடன் இடைநடுவே கைவிடப்பட்ட அபிவிருத்திப் பணிகளும் மீண்டும் செயற்படுத்தப்படுகின்றன.

மேலும், ஏற்கனவே மக்கள் பயன்படுத்தி வந்ததும் தற்போது, வனவளப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு கீழ் உள்ள காணிகளை மீண்டும் விவசாயம், சுற்றுலாத் துறை மேம்பாடு மற்றும் மக்கள் குடியிருப்புத் தேவைகளுக்காக அடர்ந்த காடுகள் அற்ற பகுதிகளை விடுவிப்பது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு எமது நாட்டில் மீண்டும் பொருளாதாரம் மீட்சி பெறுவதற்குத் திறமையான முறையில் செயற்படுகின்ற தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் அரச அதிகாரிகள் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிக்க வேண்டும். சமூக வலைத்தளங்களில் பலர் பல்வேறு விமர்சனங்களையும் தவறான குற்றச்சாட்டுகளையும் பரப்பினாலும் கூட பொதுமக்கள் இந்நாட்டின் பொருளாதார நிலைமையை உணர்ந்து செயற்படுகின்றனர்.

எனவே, தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகளுக்கு நாம் அனைவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.” – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இனியுமா இந்தியப் புராணி?

இப்பத்தியில் நாம் அண்மைக் காலமாக குறிப்பிட்டு வந்த விடயம் இப்போது அம்பலமாகி இருக்கின்றது. வெளிப்பட்டு இருக்கின்றது.

தமிழ் கட்சிகளின் தலைவர்கள் அந்த உண்மையை தமிழ் மக்கள் முன் வைத்து, அடுத்த கட்டம் குறித்து மக்களுடன் பகிரங்கக் கலந்தாய்வுக்கு - உரையாடலுக்கு - முன் வருவது இன்றைய நிலையில் அத்தியாவசியமானதாகும். தனிப்பட்ட வரவுகளுக்காக - சுயநலன்களுக்காக - உண்மைகளை மூடி மறைத்து அல்லது கண்டும் காணாமலும் போன்ற விட்டேத்திப் போக்கில் செயற்பட்டு மக்களுக்கு அவர்கள் துரோகம் இழைக்கக் கூடாது.

ஈழத் தமிழர்கள் விடயத்தில் அவர்களுக்கு நியாயத் தீர்வு வேண்டும், நீதியான அதிகார பகிர்வு வேண்டும் என்று வெறும் வார்த்தைப் பிரயோகங்களில் - உதட்டளவில் - வலியுறுத்தலை கிளிப்பிள்ளை போல சொல்லிக் கொண்டிருப்பதை தவிர இந்தியாவால் வேறு எதுவும் செய்ய முடியாது, அத்தகைய வக்கற்ற நிலையிலேயே பாரதம் உள்ளது என்பதை இப்பத்தியில் திரும்பத் திரும்ப அண்மைக்காலமாக வெளிப்படையாக வலியுறுத்திச் சுட்டி வந்தோம்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இப்போது கட்டவிழ்ந்துள்ள சர்வதேச அரசியல் சூழ்நிலையில், தனக்குரிய காப்பரண்களை - பாதுகாப்புகளை - தந்திரோபாயமாக வலுப்படுத்தி, தனக்குச் சாதகமான அணிகளுடன் நிலை எடுத்து, உறுதியாக நிற்கிறது கொழும்பு.

எண்பதுகளில் நிலவிய பூகோள அரசியல் நிலைமை இந்த பிராந்தியத்தில் இப்போது இல்லவே இல்லை. பாரதத்தின் தலைவராக பிரதமர் இந்திரா காந்தியையும் விட வலிமை மிக்கவராக இப்போதைய பிரதமர் நரேந்திர மோடி இருந்தாலும், இந்தப் பூகோளப் பிராந்தியத்தில் இந்தியத் தரப்பினால் செய்யக் கூடியவை, செய்ய முடியாதவை பற்றிய மட்டுப்படுத்தல்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

அந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டே நமது எதிர்காலப் பாதையை நாம் வகுக்க வேண்டும் என்பதைத்தான் இப்பத்தியில் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்துள்ளோம்.

தங்களுடைய சுயநலன்களுக்காகவும் சுய வரவுகளுக்காகவும்எல்லையற்றுஇந்தியப்புகழ் பாடி அளவுக்கு மீறி நம்பிக்கையூட்டுவதன் மூலம் தமிழர் தலைவர்களும் ஊடகவியலாளர் களும்தமிழினத்திற்குத் துரோகம் இழைக்கின்றனர்என்பதைச் சுட்டிக்காட்டி வந்தோம்.

அவர்கள்வானளாவஇந்தியாவைப்புகழ்ந்தாலும் -

இந்தியா ஈழத் தமிழர்களை கைவிடவே மாட்டாது என அவர்கள் மந்திர உச்சாடனம் செய்தாலும் -

இந்தியாவுக்கு பின்னால் சரணாகதி அடைந்து இருப்பதன் மூலம் மட்டுமே ஈழத் தமிழினத்திற்கு ஜென்ம சாபல்யம் கிடைக்கும் என வலிமையாக அவர்கள் விடாது குரல் எழுப்பினாலும் -

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் தன்னால் செய்யக்கூடிய இயலுமை யாது என்ற உண்மையை இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களிடம் வெளிப்படையாக ஒப்பு கொண்டு விட்டார்.

நாங்கள் வெறும் அழுத்தங்களை மட்டும் தான் கொடுக்கலாம் என்று அவர் கூறுவது வாய்ப்பேச்சில் வலியுறுத்தும் தங்கள் தகுதி பற்றியது மாத்திரம்தான்.

பக்கத்தில் இருக்கும் அணுசக்தி வல்லமை கொண்ட நாடான பாகிஸ்தானுக்கு 'ஸேர்ஜிக்கல் ஸ்ட்ரைக்' என்ற தாக்குதல் மருந்தைக் கொடுக்கக்கூடிய வலிமையான நிலையில் இருக்கும் இந்தியாவுக்கு இலங்கை விடயத்தில் மூடிய அறைக்குள் வெறும் வார்த்தை பிரயோகத்தில் அழுத்தம் மட்டுமே கொடுக்க முடியும். அதுதான் நிதர்சனம். நிஜம்.

ஏனெனில் இந்தியாவின் தென்கோடியில் இந்தனூண்டு அளவில் குட்டித் தீவாக இலங்கை இருந்தாலும், இன்று அது சீனாவின் பக்கத்தில் அணி சேர்ந்து நிற்கின்றது.

இன்றைய நிலையில் அதனுடன் (இலங்கையுடன்) நாடியைத் தடவி, சமரசம் பேசி, சமாளித்து, தாஜா பண்ணித்தான் காரியம் எதையும் இந்தியா ஆற்ற முடியும். அதற்கு மேல் இந்தியாவால் ஏதும் செய்ய முடியும் என்ற கருதுவது பகல் கனவு.

இந்தியாவின் வலிமை அல்லது அழுத்த எல்லை எதுவரை சாத்தியம் என்பது தமிழ் தலைவர்களுக்கு இப்போது புரிந்திருக்கும். இனியும் புரியவில்லை என்று அவர்கள் நடிக்க முடியாது.

சுயநலனுக்காகவும், மாதாந்த சுய வரவுகளுக்காகவும்இந்தியத்துதிபாடுவதைஇனி சம்பந்தப்பட்டோர் நிறுத்த வேண்டும். உண்மை நிலைமை குறித்துத் தமிழ் மக்களுடன் மனம் திறந்து பேசி, கொள்கை மாற்ற நிலைப்பாட்டுக்கு இணங்க முன்வர வேண்டும். அதுதான் தமிழ் தலைவர்களுடைய இப்போதைய கடமை - கடப்பாடாக - உள்ளது.

புலிகளின் அழிவோடு அகப்பலத்தை இழந்துவிட்ட தமிழர்கள், தங்களை பாதுகாக்க ஒரு புறப்பலமாக இந்தியாவை இனியும் நம்பித் தொடர்ந்து மோசம் போவதில் அர்த்தம் இல்லை.

பூகோளஅரசியலில்நாம்நமதுபாதுகாப்புக்கும் உதவிக்கும் தங்கியிருப்பதற்கு இந்தியா அல்லாத வேறு பல சக்திகள் உண்டு. அவற்றின் கதவைத் தட்டுவதே இன்று தமிழ் மக்கள் முன் உள்ள ஒரே மார்க்கமாகும்.

# அரச தரப்பு எம்.பிக்கள் எழுத்தறிவு அற்றவர்கள்

## நேற்று சபையில் சுமந்திரன் காட்டம்



இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், வாசிக்கத் தெரியாதவர்கள், எழுத்தறிவு அற்றவர்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் விமர்சித்துள்ளார்.

இதன் காரணமாகவே, உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பான விவாதத்தை நேற்று நடத்துவது தொடர்பான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –

"இலங்கையின் தொடர்பாடல் துறையை மையப்படுத்திய பாரிய மாற்றமொன்றை மேற்கொள்ளவுள்ள சட்டம் தொடர்பில் இன்றைய நாடாளுமன்ற விவாதம் நடத்தப்படுகிறது.

எனினும், இந்த சட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பான பொது இணக்கப்பாடு இந்த நாடாளுமன்றத்தில் இல்லை. இன்று காலை சபாநாயகருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது, நாம் எமது கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் முன்வைத்தோம்.

இதற்கமைய, கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. எனினும் தற்போது நடைபெறும் இந்த விவாதம் சட்ட விரோதமானது.

நிலையியற் கட்டளைகளுக்கு எதிராக இந்த விவாதம் நடத்தப்படுகிறது. துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதை தொடர்ந்தே நாடாளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டும்.

குறித்த குழுவின் அறிக்கை கிடைக்காத சில சந்தர்ப்பங்களில், நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் விவாதங்கள் நடத்தப்படாமல் அவை ஒத்திவைக்கப்பட்டன. இந்த நிலையில், இன்று நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த பின்னணியில், இந்தச் சட்டமூலம் தொடர்பில் இன்று நாடாளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டுமென வாக்களித்தவர்களில் அதிகளவானோர் வாசிக்க தெரியாதவர்கள் என்றே தோன்றுகின்றது. – என்றார்.

# மிதிகம ரயில் நிலையத்துக்கு அருகே ரஜரட்ட ரெஜினியுடன் மோதிய கார்!



சுற்றுலா பயணி சென்ற கார் ரயிலிடன் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை மிதிகம ரயில் நிலையத்தில் ரஜரட்ட ரெஜினி விரைவு ரயிலுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் சுற்றுலா பயணி ஒருவரும் வழிகாட்டி ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.


ரயில் மஹோ சந்தியை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளானதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, விபத்தின் போது காரில் இரண்டு சுற்றுலா பயணிகளும் சுற்றுலா வழிகாட்டி ஒருவரும் இருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

எச்சரிக்கை மணி அடித்த நிலையிலும், எச்சரிக்கை விளக்கு எரிந்துகொண்டிருந்த நிலையிலும் கார் ரயில் கடவையை கடக்க முயன்றதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# விரைவில் இந்தியா முழுவதையும் ராம ராஜ்ஜியமாக மாற்றுவோம்

## - தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கருத்து



விரைவில் இந்தியா முழுவதையும் ராம ராஜ்ஜியமாக மாற்றுவோம் என தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

அயோத்தி ராமர் கோவில் கும்பா பிஷேக விழாவையொட்டி சென்னை நாரத கான சபாவில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி கலந்து கொண்டார்.

அதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

"பாரத நாடு ஸ்ரீராமர் இல்லாமல் இல்லை, ராமர் எல்லா இடங்களிலும் வசித்து வருகிறார். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ராமரை பற்றி தெளிவாக கூறியுள்ளார்.

ராமர், பாரதம், தமிழ்நாடு மூன்றையும் எவராலும் பிரிக்க முடியாது. ராமர் உருவாக்கிய ராஜ்ஜியத்தை போல, பிரதமர் மோடி 10 ஆண்டுகளாக இந்தியாவை வலுவான நாடாக உருவாக்கி வருகிறார்.

10 ஆண்டுகளில் நாட்டு மக்கள் அடிநிலையிலிருந்து மேல் நிலைக்கு வர தொடங்கியுள்ளனர். கூடிய விரைவில் இந்தியா முழுவதையும் ராம ராஜ்ஜியமாக மாற்றுவோம்.

மொழி, இனம், கலாச்சாரம் ஆகிய வற்றை சுயநலத்திற்காக பிரித்துக் கொண்டிருந்தனர், இனி அவ்வாறு எவராலும் பிரிக்க முடியாது.

ராம ராஜ்ஜியத்தின் அஸ்திவாரம் அமைத்த நாள் இன்று. சுதந்திர தினம் எவ்வளவு முக்கியமோ அதுபோன்ற நாள் இது.

ராமர் இல்லாமல் பாரதத்தை நினைத்துப் பார்க்க முடியாது. தமிழ் இலக்கியங்களில் ராமர் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது." -என்றார்.

# ஜெயலலிதாவின் நகைகளை தமிழக அரசிடம் ஒப்படைக்கவும்

## பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவு

சொத்துக்குவிப்பு வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நகைகளை தமிழக அரசிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் நேற்று உத்தரவை பிறப்பித்துள்ளது.

அத்துடன், பறிமுதல் செய்யப்பட்ட தங்க, வைர நகைகளை ஏலம் விடுவதற்கு பதில், அவற்றை தமிழக அரசிடம் ஒப்படைப்பது சிறந்தது எனவும் நீதிமன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 1991-96 ஆம் ஆண்டு வரை தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா மீது வருமானத்துக்கு அதிகமாக 66 கோடி ரூபா பெறுமதியான சொத்துக் குவித்தார் என வழக்கு தொடரப்பட்டது.

இதையடுத்து தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை பொலிஸார், ஜெயலலிதாவின் இல்லத்தில் நடத்திய சோதனையில் தங்க, வைர நகைகள், வெள்ளிப் பொருள்கள், ரத்தின கற்கள், கைக்கடிகாரங்கள் உட்பட என ஏராளமான பொருள்களை பறிமுதல் செய்தனர்.

பெங்களூரை சேர்ந்த சமூக ஆர்வலர் நரசிம்ம மூர்த்தி கடந்த ஆண்டு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தொடர்ந்தார். அதில், கர்நாடக அரசின் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் பொருள்களை ஏலம் விட வேண்டும்.



அந்த தொகையில் இவ்வழக்குக்காக கர்நாடக அரசு செலவு செய்த பணத்தை வழங்க வேண்டும். மீதியுள்ள பணத்தை மக்களின் நலத்திட் டங்களுக்கு பயன்படுத்த வேண்டும் என கோரினார்.

இதற்கிடையே, ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ.தீபா மற்றும் அவரது சகோதரர் தீபக் ஆகியோர் தனித்தனியாக மனுக்களை தாக்கல் செய்தனர். அதில், ஜெயலலிதாவின் பொருள்களை ஏலம் விடக்கூடாது. அவற்றை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என கோரினர். இந்த மனுக்கள் நிலுவையில் உள்ளன.

இந்த வழக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி ஹெச்.ஏ.மோகன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, "ஜெயலலிதாவின் வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட தங்க, வைர நகைகள் மற்றும் வெள்ளி பொருள்களை கர்நாடக அரசு ஏலம் விட அனுமதிக்க முடியாது. அதற்கு பதிலாக அந்த நகைகளை கர்நாடக அரசு, தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டும்.

கர்நாடக அரசின் உள்துறை செயலர் மற்றும் பொலிஸ் அதிகாரி மேற்பார்வையில் தமிழக அரசின் உள்துறை செயலாளர் மற்றும் தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநரிடம் வழங்க வேண்டும்.

இந்த நகைகளை சரிப்பார்த்து பெற்றுக் கொள்ள தமிழக அரசு கூடுதலாக அதிகாரி ஒருவரையும் நியமிக்க வேண்டும். ஜெயலலிதா மீதான வழக்கை நடத்திய செலவினங்களுக்காக கர்நாடக அரசுக்கு தமிழக அரசு 5 கோடி ரூபா வழங்க வேண்டும்" என உத்தரவிட்டார்.

# ஹமாஸ் அமைப்பு நடத்திய தாக்குதலில் 24 இஸ்ரேல் இராணுவத்தினர் உயிரிழப்பு



மத்திய காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தினர் மீது ஹமாஸ் ஆயுதக் குழு வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் 24 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்பு படை காசா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போருக்கும் இன்னும் முடிவு காணப்படவில்லை.

இந்த நிலையில், மத்திய காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தினர் வெடிபொருள்களை தயார் செய்துகொண்டிருந்த போது, ஹமாஸ் ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்கள், அவர்கள் மீது வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

இந்தத் தாக்குதலில் 24 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த 3 மாதமாக நடந்துவரும் போரில், இது மிகவும் மோசமான தாக்குதல் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

24 இஸ்ரேல் இராணுவத்தினர் கொல்லப்பட்ட பின்னர் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, “போர் தொடங்கியதில் இருந்து, இந்த நாள் மிக கடினமான நாள்களில் ஒன்று. முழுமையான வெற்றி கிடைக்கும் வரை நாங்கள் போராடுவதை நிறுத்த மாட்டோம்” என்று கூறியுள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட வெஸ்ட் பேங்க் பகுதியில் இரவோடு இரவாக இருபதுக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் ஒக்டோபர் 7 முதல் கைது செய்யப்பட்ட பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 6 ஆயிரத்து 220 ஆக உயர்ந்துள்ளது. ஒக்டோபர் 7 முதல் காசா மீதான இஸ்ரேலிய தாக்குதல்களில் 25 ஆயிரத்து 490 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் 63 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். ஹமாஸ் தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,139 ஆக உள்ளது.

# கனடாவில் ஹெலிக்கொப்டர் விபத்து: மூவர் உயிரிழப்பு, நால்வர் காயம்

கனடாவில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

கனடாவின், பிரிட்டிஸ் கொலம்பிய மாகாணத்தில் விபத்து இடம்பெற்றுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், விபத்துக்குள்ளான ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த மேலும் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கனேடிய பாதுகாப்பு துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுற்றுலா நிறுவனமொன்றின் ஹெலிக்கொப்டரில் பயணித்தவர்களே இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.



# முதலிடத்தைப் பெற்றார் ஜனாதிபதி புடின்!

உலகிலேயே அதிக சொத்து மதிப்புக்களைக் கொண்ட அரசியல் வாதிகளின் பட்டியலில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முதலிடத்தைப் பிடித்துள்ளார் என பிரபல சர்வதேச ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இதன்படி அவரது ஒட்டுமொத்த சொத்தானது சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனக் கூறப்படுகின்றது. அத்துடன், அவரது ஆண்டு வருமானம் 140,000 அமெரிக்க டொலர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# சித்த வைத்தியசாலைக்கான புதிய கட்டடம் திறந்துவைப்பு

ஆயுர்வேத சித்த வைத்தியசாலையில் உள்நோயாளர்களின் யாழ் மாவட்ட சித்த வைத்தியசாலைக்கான புதிய கட்டடம் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் இயங்கும் மாவட்ட சித்த வைத்தியசாலையின் சேவையினை விஸ்தரிக்கும் நோக்கில் புதிய கட்டடத் தொகுதி வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸினால் நேற்றுத் திறந்துவைக்கப் பட்டது.

இந்த புதிய கட்டடத்தில் இனி வரும் காலத்தில் இலவச சேவையை இயக்கவும், அதேபோல முன்னர் இலவச சேவை இடம்பெற்ற இடத்தில் கட்டண சேவையை இயக்கவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

யாழ் மாவட்ட மக்களிடையே உள்ளூர் மருந்துகளுக்கு அதிக வரவேற்பு உள்ள நிலையில் நோயாளர்களின் வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் முன்னடுக்கப்பட்ட இந்தப் செயற்திட்டத்துக்கு 105 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

ஆயுர்வேத வைத்தியசாலையின் பல்வேறு சேவைகளுக்குமான புதிய பிரிவுகளும் திறந்து வைக்கப்பட்டன. நோயாளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் மற்றும் வெந்நீர் பெற்றுக்கொள்ள ஏதுவாக வெந்நீர் – சுத்திகரிப்பு இயந்திரமும் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் “ஆகார ஔடதம்“ எனும் பாரம்பாரிய உணவு தொடர்பான இறுவட்டு, “சித்தமருந்து செய்முறை தொகுப்பு” எனும் நூலின் இறுவட்டும் வெளியிட்டுவைக்கப்பட்டன.

நிகழ்வின் பின்னர் ஆளுநர் நோயாளர்களைச் சந்தித்து அவர்களின் நலன்களை விசாரித்ததுடன் அவர்களுடனும் கலந்துரையாடினார்.











# வவுனியாவில் இருந்து களுவாஞ்சிக்குடிக்கு மோட்டர் சைக்கிளில் கஞ்சா கடத்திய இருவரும் அதை வாங்கச் சென்ற இருவரும் கைது



**(கனகராசா சரவணன்)**

வவுனியாவில் இருந்து மோட்டர் சைக்கிளில் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிக்கு 845 கிராம் கஞ்சாவைக் கடத்தி சென். இரு வியாபாரிகள், அவர்களிடம் கஞ்சா வாங்கச் சென்ற வியாபாரிகள் இருவர் என 4 பேரை பொலிஸார் கைது செய்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்றது. அத்துடன் ஒரு மோட்டர் சைக்கிள், ஒரு ஓட்டோ ஆகியவற்றையும் தாங்கள் மீட்டுள்ளனர் எனக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் களுவாஞ்சிக்குடிக் கடற்கரையில் நேற்று முன்தினம் மாலை கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் அந்தப் பகுதியில் ஓட்டோ ஒன்றில் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தைச் சேர்ந்த இரு வியாபாரிகள் சென்று காத்துக் கொண்டிருந்தனர். வவுனியாவில் இருந்து மோட்டர்சைக்கிள் ஒன்றில் கஞ்சாவைக் கடத்தி வந்த இருவர் காத்திருந்த வியாபரிகளிடம் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவர்களை கண்காணிப்பில் மாறு வேடத்தில் இருந்த பொலிஸார் சுற்றிவளைத்து மடக்கிப்பிடித்து 4 பேரைக் கைது செய்தனர். அத்தோடு 845 கிராம் கஞ்சா, கடத்தலுக்குஒ பயன்படுத்தப்பட்ட மோட்டர் சைக்கிள் ஒன்று என்பவற்றை மீட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# 13 நாள் பெண்குழந்தை பால் புரைக்கேறி மரணம்

## மட்டு. இருதயபுரத்தில் சம்பவம்



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவில் உள்ள இருதயபுரம் பகுதியில் தாய்ப் பால் புரைக்கேறி 13 நாள் பெண் குழந்தை உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருதயபுரம் பகுதியைச் சேர்ந்த அஜித்குமார் அனோஜினி என்ற பெண் சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இதனையடுத்து குழந்தையின் தாயாரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாணையின் போது அவர் சற்று மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டறிந்து, அவரை வைத்தியசாலையில் அனுமதித்தமையுடன் சிசுவின் சடலத்தை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகாக ஒப்படைத்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை பிரேத பரிசோதனை இடம்பெற்றது. குழந்தைக்குப் பால் புரைக்கேறி உயிரிழந்துள்ளதாக சட்ட வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்தாகவும் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# இலங்கையின் தடையால் மாலைத்தீவுக்கு இடம்மாறுகின்றன சீன ஆய்வுக் கப்பல்கள்

## இந்திய பெருங்கடலில் அதிகரிக்கும் பதற்றம்

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் நிலைநிறுத்தப்படுவதில் நிலையான அதிகரிப்பு ஏற்பட்டு வருவது குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

மாலைத்தீவில் இந்திய துருப்புக்களை நிலைநிறுத்துவது தொடர்பாக இந்தியாவிற்கும் மாலைத்தீவிற்கும் இடையே தொடர்ந்து முறுகல்கள் நிலவி வரும் நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

சீன ஆராய்ச்சிக் கப்பல் Xiang Yang Hong 03 இந்தியப் பெருங்கடலுக்குள் நுழைந்து மாலைத்தீவுக்குச் செல்வதாக ஓபன் சோர்ஸ் இன்டலிஜென்ஸ் (OSINT) மற்றும் கடல் சார் கண்காணிப்பு இணையதளங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவும் அமெரிக்காவும் கடந்த இரண்டு வருடங்களாக, சீனக் கப்பல்கள் இலங்கையின் துறைமுகங்களுக்கு ஆராய்ச்சி நோக்கங்களுக்காக வருகை தருவது குறித்து இலங்கை அதிகாரிகளிடம் கவலை தெரிவித்திருந்தன.

XIANG YANG HONG 03 கப்பல் 2023 டிசம்பரில் கொழும்பு கடற்பரப்பிற்கு வருகை தர இருந்தது. இலங்கையை அண்டிய கடற்பரப்பில் வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்கள் ஆய்வுகள் மேற்கொள்ள ஒருவருடம் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து சீனாவின் கவனம் மாலைத்தீவை நோக்கி திரும்பியுள்ளது.

மாலைத்தீவுக்கும் இந்தியாவுக்கும் அதிகரித்துள்ள பதற்றமான சூழ்நிலைக்கு பின்புலத்திலேயே சீனாவின் ஆய்வுக் கப்பல்களும் இந்திய பெருங்கடல் பகுதியின் ஊடாக மாலைத்தீவு நோக்கி தமது பயணங்களை மேற்கொள்கின்றன.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீன ஆராய்ச்சிக் கப்பல்களின் பயணத்தில் நிலையான அதிகரிப்புகள் ஏற்பட ஆரம்பித்துள்ளன என இந்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தியப் பெருங்கடல் பகுதியை மையமாக கொண்டு சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதால் எதிர்காலத்தில் இந்த விடயம் பிராந்திய பதற்றத்துக்கு வழிவகுக்கக் கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

லட்சத்தீவு விவகாரத்தை தொடர்ந்து இந்தியா மற்றும் மாலைத்தீவுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளில் முறிவு ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பெப்ரவரி 23, 24 ஆம் திகதிகளில் கச்சதீவு அந்தோனியார் திருவிழா

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வருடாந்த திருவிழாவிற்கான முன்னேற்பாட்டுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில் யாழ். இந்திய துணை தூதரக அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலாளர், நெடுந்தீவு பங்குத்தந்தை, யாழ். மறைமாவட்ட குரு முதல்வர், கடற்படையினர் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர்.

நெடுந்தீவுக்குரிய வட தாரகை மற்றும் நெடுந்தாரகை படகுகள் திருத்தப்பணிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால், போக்குவரத்து சிக்கல் ஏற்படக்கூடும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்அம்பலவாணர்சிவபாலசுந்தரன்இதன்போது சுட்டிக்காட்டினார்.

எனினும், படகுகளை திருத்தி போக்குவரத்தில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.



# ஒரு லட்சத்துக்கும் அதிக நிர்வாணப் படங்கள் இங்கு சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளன!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தகவல்



2024ஆம் ஆண்டின் முதல் சில வாரங்களுக்குள் 500க்கும் மேற்பட்ட நிர்வாணப் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த ஆண்டு மக்கள் 6,690 ஒன்லைன் பாலியல் துஷ்பிரயோகங்கள் நடந்துள்ளன எனவும் அவர் நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை காப்புச் சட்டம் மீதான விவாதத்தைத் தொடங்கி வைத்த அமைச்சர், கடந்த ஆண்டு 100,000க்கும் மேற்பட்ட நிர்வாண படங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளன எனக் கூறியிருந்தார்.

மேலும், கடந்த ஆண்டு 8,000 சைபர் குற்றங்கள் நடந்துள்ளன என்றும், இவை அனைத்தும் முறைப்பாடு செய்யப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்தப் புள்ளிவிவரங்கள் தெரியவந்துள்ளன எனவும், இவ்வாறான பல சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்படாமல் இருக்கலாம் எனவும் கூறியுள்ளார்.

ஒன்லைன் பாதுகாப்பு மசோதா இணையக் குற்றங்களை மட்டுமே உள்ளடக்கியது. கிளர்ச்சிகளுக்கு வழிவகுக்கும், மத மற்றும் இன நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தூண்டுதல்களைத் தடுக்கிறது. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி யாரும் பாதிக்கப்படுவதை நாங்கள் விரும்பவில்லை.

சிவில் இயக்கங்கள், ஐ.நா வதிவிடப் பிரதிநிதி மற்றும் ஆசியக் கூட்டமைப்பினரால் முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலத்திற்கான திருத்தங்கள் பின்னர் பரிசீலிக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

"இந்த அமைப்புகளுடன் நான் கலந்துரையாடினேன், அவர்கள் பிரேரணையில் சில திருத்தங்களை கொண்டு வந்தனர். எவ்வாறாயினும், இவற்றில் சில திருத்தங்களுக்கு இப்போது இடமளிக்க முடியாது என சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

அந்தத் திருத்தங்களை அடுத்த முறை அமைச்சரவை கூடும் போது சமர்ப்பித்து பின்னர் நாடாளுமன்றத்தில் முன்வைப்பேன். எனினும், தற்போது உயர்நீதிமன்றம் பரிந்துரைத்த திருத்தங்களை மட்டுமே கொண்டு வருவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டத

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

இன்று காலை 8 மணி முதல் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த தொழிற்சங்க நடவடிக்கையை கைவிடுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

வைத்தியர்களுக்கான 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தற்காலிகமாக இடைநிறுத்தி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டதால், திட்டமிடப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாத சம்பளத்துடன் வைத்தியர்களுக்கு வழங்கப்படவிருந்த 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளதால், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் சமில் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியர்களின் ஜனவரி மாத சம்பளத்துடன் வழங்கப்படவிருந்த கொடுப்பனவை தற்காலிகமாக இடைநிறுத்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் கடிதமொன்று வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து, இன்று காலை 8 மணி முதல் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று அறிவித்தது.

இந்த நிலையில், கொடுப்பனவை இடைநிறுத்தி வெளியிடப்பட்ட கடிதத்தை, சுகாதார சேவைகள் பணிப்பாளர் மீளப் பெற்றுக்கொண்டதால், தொழிற்சங்க நடவடிக்கையை கைவிடுவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்துள்ளது என வைத்தியர் சமில் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# இடமாற்றங்களை உடனடியாக செயற்படுத்துமாறு பொதுச்சேவைகள் ஆணைக்குழுவால் அறிவுறுத்தல்

2024 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களை உடனடியாக செயற்படுத்துமாறு அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள பிரதானிகளுக்கு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வருடாந்த இடமாற்ற நடைமுறைகளுக்கமைய இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் கையொப்பத்துடன் இந்த அறிவுறுத்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வருடாந்த இடமாற்றம் தொடர்பில் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் எவரேனும் அதிருப்தியடைந்திருந்தால், நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு தமது மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்கும் வாய்ப்பு காணப்படுவதாக ஆணைக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எனினும், அந்த மேன்முறையீடுகள் தொடர்பில் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையின் தீர்மானம் அறிவிக்கப்படும் வரை இடமாற்றங்கள், வழங்கப்பட்டுள்ள விதத்திலேயே அமுல்படுத்தப்பட வேண்டும் என பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால், அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள பிரதானிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 955 நபர்கள் கைது

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 955 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, போதைப்பொருள் தொடர்பிலான சுற்றிவளைப்பின் போது 633 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பட்டியலிலிருந்த 322 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 187 கிராம் ஹெரோயின், 14 கிலோ 700 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன், போதைப்பொருளையும் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முதலையின் பிடியில் இருந்து காப்பாற்றப்பட்ட தமிழ்க் கைதி

## அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை

அனுராதபுரம் சிறைச்சாலை கைதி ஒருவர் முதலையின் தாக்குதலுக்கு இலக்காகி முதலையால் ஆற்றுக்குள் இழுத்துச் செல்லப்பட்டபோதும் பெரும் முயற்சியை அடுத்துக் காப்பாற்றப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள திறந்தவெளி சிறைச்சாலை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 43 வயதுடைய தமிழ்க் கைதி ஒருவரே இவ்வாறு முதலையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

சிறைச்சாலைப் பகுதியில் உள்ள மல்வத்து ஓயாவை அண்மித்த பகுதியில் மேற்படி கைதியும், இன்னும் சில கைதிகளும் பயிர்ச் செய்கைகளில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டிருந்தபோது மூங்கில் புதருக்குள் மறைந்திருந்த முதலை ஒன்று கைதியின் காலைப் பிடித்து மல்வத்து ஓயாவுக்கு இழுத்துச் சென்றது என்று சிறைச்சாலை அதிகாரி தெரிவித்துள்ளார்.

முதலையின் தாக்குதலுக்கு உள்ளாகி ஒரு கை, கால் மற்றும் கழுத்துப் பகுதியில் காயமடைந்த மேற்படி கைதி அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவருக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

மல்வத்து ஓயாவில் நீராடச் சென்ற கைதியை முதலை தாக்கியது எனக் கிடைத்த தகவலை மறுத்த சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரி, அந்தக் கைதி பயிர்ச்செய்கையில் நேற்றுமுன்தினம் மாலை ஈடுபட்டிருந்தபோதே முதலையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்றும் கூறியுள்ளார்.

# இம்மாதத்தில் பணவீக்கம் ஏழு வீதமாக உயரக் கூடும்

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்

வற் வரி அதிகரிப்பு மற்றும் மோசமான வானிலை காரணமாக இந்த மாதத்தில் பணவீக்கம் 7 வீதமாக உயரலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இலங்கையில் பணவீக்கம் சராசரியாக 4 முதல் 6 வீதம் என்ற அளவில் பேணப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.



இதன் காரணமாக சந்தை வட்டி விகிதங்களை ஏதோ ஒரு வகையில் மாற்றியமைக்க வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, வங்கிக் கடனுக்கான வட்டி வீதத்தை மேலும் குறைக்க வாய்ப்புகள் உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



## பெலியத்தயில் ஐவர் சுட்டுக்கொலை:

# சி.சி.ரி.வி. காட்சிகளின் மூலம் தகவல்கள் பல வெளியாகின

அபே ஜனபல கட்சியின் தலைவர் உள்ளிட்ட ஐவர் பெலியத்தயில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சி.சி.ரி.வி. காட்சிகள் ஊடாக பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் தென் மாகாணத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பெலியத்த அதிவேக நுழைவாயிலுக்கு அருகில், துப்பாக்கிச்சூடு நடத்தி ஐவரை கொலை செய்த சந்தேகநபர்கள் தப்பிச்சென்ற காட்சிகள் அருகிலிருந்த சி.சி.ரி.வி. கமராக்களில் பதிவாகியிருந்தன.

மாத்தறை-கம்புருபிட்டியவில் ஜீப்பில் இருந்து ஒருவர் இறங்கும் சி.சி.ரி.வி. காட்சிகளும் விசாரணைக் குழுக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

இந்த காணொளிகளை தொலைபேசி பகுப்பாய்விற்கு உட்படுத்தி, அதன் அடிப்படையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பெலியத்த அதிவேக வீதி நுழைவாயிலுக்கு அருகில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் அபே ஜனபல கட்சியின் தலைவர் சமன் பெரேரா உள்ளிட்ட ஐவர் உயிரிழந்தனர்.

டிஃபென்டர் வாகனத்தில் வந்த இவர்கள், வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகில் அதனை நிறுத்திவிட்டு செல்லும் போது, பின்னால் ஜீப் ஒன்றில் வந்த சிலர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த அபே ஜனபல கட்சியின் தலைவர் சமன் பெரேராவை துரத்திச்சென்ற துப்பாக்கிதாரிகள், வெளியேறுவதற்கு எவ்வித வழியும் இல்லாத ஓர் இடத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் நால்வர் சம்பவ இடத்திலும், மற்றொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

பெந்தொட்ட பகுதியை சேர்ந்த சுரத்தலா என்றழைக்கப்படும் இளைய குட்டிகே சமீர மதுஷங்க, இந்துருவ பகுதியை சேர்ந்த குமார விதாரனலாகே ஹசித்த சஞ்சு, குருணாகலையை சேர்ந்த பையா துரயாலகே புத்திக்க ராஜபக்ஷ, தெமட்டகொடையை சேர்ந்த கோராலலாகே நளின் சம்பிக்க ஜயதிலக்க ஆகியோரும் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் தொடர்பான பிரேதப் பரிசோதனைகள் தங்காலை வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றன.

முதற்கட்ட விசாரணைகளின் பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவிருந்தன.

துப்பாக்கிச்சூட்டிற்கான உரிய காரணத்தை இதுவரை பொலிஸார் அறிவிக்கவில்லை. இந்த நிலையில் இந்த நபர்கள் தொடர்பிலான பல விடயங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

2022 ஆம் ஆண்டு ஜுன் 5 ஆம் திகதி மூன்று நண்பர்களுடன் கெப் ஒன்றில் பயணித்த அசுன் சாமர என்பவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவர், அதற்கு ஆதரவு வழங்கிய ஐவரை தங்காலை பொலிஸார் அடிக்கடி கைது செய்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் நேற்று முன்தினம் உயிரிழந்த பெந்தோட்டையை சேர்ந்த சுரதலா எனப்படும் இளைய குட்டிகே சமீர மதுஷங்க என்வர் ஒரு சந்தேகநபராவார்.

இந்த வழக்கில் ஆஜராவதற்காக தங்காலை சென்று கொண்டிருந்த போதே சமன் பெரேரா உள்ளிட்டவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

கடந்த வருடம் ஜுன் 5 ஆம் திகதி இடம்பெற்ற குடாவெல்லே அசேல சம்பத் என்பவரின் கொலைச் சம்பவம் தொடர்பிலான வழக்குடன் தொடர்புடைய இருவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அபே ஜனபல கட்சி கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டதன் பின்னர் ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை பெற்றுக் கொண்டதுடன், அதற்கு ஒருவரை நியமிப்பது தொடர்பில் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

அவ்வேளையில் கட்சியின் செயலாளராக செயற்பட்ட வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் சில நாள்கள் காணாமல் போயிருந்ததுடன், தன்னை கடத்திச் சென்றிருந்ததாக அவர் பின்னர் கூறினார்.

எனினும், இறுதியில் அந்த நாடாளுமன்ற ஆசனத்திற்கு அத்துரலியே ரத்தன தேரர் நியமிக்கப்பட்டார்.

இந்த கொலையின் பின்னணியில் அரசியல் தொடர்பு இருப்பதாக இதுவரை உறுதியாகவில்லையெனவும் தெற்கின் இரண்டு பாதாள உலகக் கோஷ்டிகளுக்கிடையிலான பிரச்சினையின் விளைவாகவே இது இடம்பெற்றிருக்கலாம் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.





# தேரரின் கொலைக்குப் பயன்படுத்திய சொகுசு கார் எரியுண்ட நிலையில் மீட்பு

சொகுசு காரில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கம்பஹா, ஹேனேகம பிரதேசத்திலுள்ள விகாரையின் கலபாலுவாவே தம்மரத்ன தேரர் உயிழந்தார்.

ஹேனேகம பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் இவர் வசித்து வந்துள்ளார். அந்த விகாரையின் காணி தொடர்பிலான பிரச்சினை காரணமாக மல்வத்துஹிரிபிட்டிய விகாரைக்கு வந்து அவர் அன்னதானம் வழங்கியுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சொகுசு காரில் வந்த இனந்தெரியாத நால்வர், தாம் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் எனவும் தமக்குக் கிடைத்த தகவலின் பேரில் சோதனையிட வந்தோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் சோதனையிடுவது போன்று நடித்து இரண்டு முறை துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் மேற்கொண்ட முதற் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், கலபாலுவாவே தம்மரதன தேரரின் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கொகுசு கார் எரியூட்டப்பட்ட நிலையில், நவகமுவ பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலத்தினால் மக்களின் கருத்துச் சுதந்திரம் பெரிதும் பாதிப்புறும்

## சிறிதரன் எம்.பி. சபையில் தெரிவிப்பு

நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை தடுக்கும் வகையில் உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்றது.

மேற்படி சட்டமூலத்தை நேற்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் சபையில் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தன.



இதனையடுத்து அந்த சட்டமூலத்தை நேற்று விவாதத்திற்கு எடுத்துகொள்வது தொடர்பில் வாக்கெடுப்பை நடத்துமாறு கோரப்பட்டது.

அதற்காக வாக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில், இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தை நேற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு ஆதரவாக 83 வாக்குகளும் எதிராக 50 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதனையடுத்து இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நடத்தும் தீர்மானம் 33 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்தநிலையில் இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன், தாம் அதனை முழுமையாக எதிர்க்கிறார் எனத் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.01.2024



மேஷம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நல்ல இசையைக் கேட்பதன் மூலம் உங்கள் மனதை மகிழ்ச்சியாக வைத் திருக்கலாம்.உணர்ச்சி வசப்படாமல் இருங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திறமையாக பணியாற்ற யதார்த்தமான அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். சகஜமான அணுகுமுறையை கையாளவும்.

இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும். பணத்தட்டுப்பாடு இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

சளி மற்றும் இருமல் தொந்தரவுகள் காணப்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.



ரிஷபம்

இன்று அதிர்ஷ்டங்கள் நிரம்பிய நாளாக இருக்கும். உங்கள் தனித்திறமை மற்றும் உற்சாகத்தின் மூலம் உங்கள் இலக்குகளை அடைவீர்கள். இதனால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அந்த வாய்ப்புகளை வெற்றிகரமாக பயன்படுத்துவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் நல்ல விஷயங்கள் நடக்கும். உங்கள் துணையுடன் பயனுள்ள நேரத்தை கழித்து மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடுவீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்விற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் சம்பளம் உயரும்.

இன்று எந்தவிதமான ஆரோக்கிய குறைபாடும் இருக்காது. நீங்கள் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.



மிதுனம்

இன்று சாதகமான விளைவுகள் காணப்படாது. அதிர்ஷ்டத்தை விட உங்கள் சுய முயற்சியில் நம்பிக்கை வையுங்கள். முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று இறுக்கமான பணிச்சூழல் காணப்படும். அமைதியான நிலை காணப்படாது. உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து செயலாற்றுங்கள்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் உறவைப் பாதிக்கும். அமைதியாக இருந்து எதையும் சகஜமாக எடுத்துக்கொள்ளுங்கள்.

பண வருவாய் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் உங்களை கவலைப்பட வைக்கும்.

இன்று அசௌகரியமாக உணர்வீர்கள். இதனால் மனதில் பதட்டம் உண்டாகும்.



கடகம்

இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம்அதனை நீங்கள் சமாளிக்கலாம். நீங்கள் பல பணிகளில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. மேலும் தவறுகள் நேராமல் இருக்க உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டும்.

தற்புகழ்ச்சிகளை தவிர்க்க வேண்டும். வார்த்தைகள் கவனமின்றி உதிர்க்கும் வாய்ப்புள்ளதால் அமைதியாக இருக்க வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிக்க பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளித் தொந்தரவுகள் காணப்படும்.



சிம்மம்

தேவையில்லாத மனக் கவலைகள் வருத்தத்தை அளிக்கும். அம்மாதிரியான கவலைகளை தவிர்ப்பது நல்லது. பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபடுவது நல்லது.

பணி இறுக்கமாக காணப்பட்டாலும் குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பீர்கள். பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மனக் குழப்பங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க மனதை அமைதியாக வைத்திருங்கள்.

பணப் புழக்கம் குறைவாக காணப்படும். பண இழப்பு காணப்படும். இது ஏமாற்றத்தை தரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.



கன்னி

இன்று அனுகூலமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை நோக்கி நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். சரியாக திட்டமிட்டால் இன்று வெற்றி காணலாம்.

உங்கள் பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். இனிமையான சூழல் காணப்படும். பணியை விரும்பி செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இனிமையான வார்த்தைகளைப் பேசி உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள்.

பண வரவு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை நல்ல விஷயங்களுக்காக பயன்படுத்துவீர்கள்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.



துலாம்

இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். எதிர்பாராத வெற்றிகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். விருந்தாளிகள் வருகை மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் பணி சலிப்பை தருவதாக உணர்வீர்கள். இறுக்கமான வேலை காரணமாக பணிகள் நிலுவையில் இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவு நல்லுறவாக காணப்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கான ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வடிவில் பணவரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். சிறந்த தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.



விருச்சிகம்

இன்று சவால்களை பொறுமையுடன் கையாள வேண்டிய சூழ்நிலை காணப்படும். உங்கள் முன்னேற்றத்தில் மந்த நிலை காணப்படும். அதிகமாக சிந்திப்பதை தவிர்த்து ஆக்க பூர்வமாக தெளிவுடன் சிந்தியுங்கள்.

அதிக வேலை காரணமாக தவறுகள் ஏற்படலாம். கவனமாக பணிகளை கையாள வேண்டும். பணிகளை முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும்.

இன்று உங்களிடம் உணர்ச்சிவசப்பட்ட அணுகுமுறை காணப்படும். இது புரிந்துணர்வை பாதிக்கும். அமைதியாக நட்பான அணுகுமுறை தேவை.

இன்று பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்களின் பிரியமான ஒருவருக்காக நீங்கள் செலவு செய்ய நேரலாம்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்கள் தொடைகளில் வலி ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.01.2024

## தனுசு

இன்று பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். ஏற்படும் சவால்களை அமைதியுடன் மேற்கொள்ளவும்.

பணிகளை முடிப்பதற்கான உங்கள் திட்டங்கள் செயல் வடிவம் பெறும். உங்கள் சக பணியாளர்களை விட நீங்கள் நன்கு பணியாற்றுவீர்கள்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையை சமாளிப்பது கடினம். நீங்கள் உங்கள் எல்லா வேறுபாடுகளையும் ஒதுக்கி விட்டு நட்புடன் பழக வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் ஏற்படும். இன்று உங்களால் சேமிக்க இயலாது.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

## கும்பம்

இன்றைய நாள் நற்பலன்களை அள்ளித் தரும். இன்று உங்கள் தன்னம்பிக்கை உயரும் வகையில் மாற்றங்கள் ஏற்படும். முக்கியமான முடிவுகளை கவனமாக எடுக்கவும்.

உங்கள் சக பணியாளர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வதாக உணர்வீர்கள். அவர்களை பொறுமையுடனும் திறமையுடனும் கையாள வேண்டும்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு விழா பற்றிய விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள். அதனை நடத்துவதற்கு பெரியவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை அவர்களுக்கு திருப்தியை அளிக்கும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சுய தேவைகளுக்காக பணத்தை பயன்படுத்துவீர்கள்.

## மகரம்

இன்று அதிர்ஷ்டகரமான நாள். கடினமான செயல்களையும் உங்கள் திறமை மூலம் எளிதாக முடிப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அது நற்பலகளைத் தரும். நீங்கள் திறம்பட செயலாற்றுவீர்கள். அது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் சென்று மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருப்பதாக உணர்வீர்கள். இன்று போதிய அளவு பணம் சம்பாதிக்க இயலும்.

உங்களிடம் காணப்படும் நேர்மறையான சிந்தனை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## மீனம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமையாது. உங்கள் தினசரி நவடிக்கையில் கவனமாக இருக்க வேண்டும். பிரச்சினைகளைத் தவிர்க்கஉரையாடுவதற்குமுன்ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து உரையாட வேண்டும். பிரார்த்தனையில் ஈடுபடுவது மன ஆறுதலைத் தரும்.

உங்கள் சக பணியாளர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவீர்கள். இதனால் வேலை இழக்க நேரலாம். எனவே எச்சரிக்கையாக செயல்படுவது சிறந்தது.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். உங்கள் உணர்சிகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தாதீர்கள்.

பணப்புழக்கம் குறைவாக காணப்படும். உங்களின் பிரியமானவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park


வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park